இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 18-12-2023

தொலைநோக்குத் திட்டங்கள்

அதிகப்படியான மழை காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழலைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் குறை சொல்லி வரும் சிலர், 'எந்தவிதமான தொலைநோக்குத் திட்டமும் அரசிடம் இல்லை' என்பது போன்ற தோற்றத்தை கட்டமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், முன்னெச்சரிக்கையுடனும் அரசு செயல்பட்டது. தொலைநோக்குத் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

47 ஆண்டுகளில் பெய்யாத மழை, 177 ஆண்டுகளில் மூன்றாவது பெரிய மழை. எனவேதான் தண்ணீர் அதிகம் தேங்கியது. கடல் மட்டம் உயர்ந்து இருந்ததால், போய்ச் சேரும் தண்ணீரை உள்வாங்கவில்லை. இவை எதையும் கணக்கில் கொள்ளாமல் குறை சொல்லி வருகிறார்கள்.

செம்பரம்பாக்கத்தில் 2015ஆம் ஆண்டு உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடாத காரணத்தால் - அ.தி.மு.க. ஆட்சியில் சென்னையே மிதந்தது. அத்தகைய நிலைமை இப்போது ஏற்படவில்லை. இதுதான் அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆகும். தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒன்றிய அரசின் குழு முழுமையாக வரவேற்றுப் பாராட்டி இருக்கிறது. 'சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததாலேயே பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது, இல்லையென்றால் பாதிப்பு மிக மோசமாக இருந்திருக்கும்' என்றும், 'உரிய நேரத்தில் நீர் திறந்து விடப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது' என்றும், 'அதற்காக இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம்' என்றும் ஒன்றியக் குழு பாராட்டி இருக்கிறது.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் குழு அமைத்தார்களே தவிர அவர்கள் கொடுத்த அறிக்கையை செயல்படுத்தவில்லை என்று கிளப்பி வருகிறார்கள். **"ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திருப்புகழ் அவர்களின் தலைமையிலான கமிட்டி அறிக்கையின் அடிப்படையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் தற்போதைய நிலை ஆகியவற்றைத் தொகுத்து விரைவில் பொதுவெளியில் வெளியிட உள்ளோம் அதேபோல், இரண்டரை ஆண்டுக்காலத்தில் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் எடுக்கப்பட்ட வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள், அதற்கான செலவினம் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வெகுவிரைவில் உங்களின் தகவலுக்காக வெளியிட உள்ளோம்"** என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் ஆலோசனைக் குழுவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள். அவர்களது ஆலோசனைப்படி திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். இதனால் தான் 2015 ஆம் ஆண்டு தண்ணீர் நின்ற பகுதியில் இப்போது தண்ணீர் குறைந்தது. சென்னையின் மையப்பகுதியில் தண்ணீர் குறைந்து நிற்கக் காரணம் அரசு செயல்படுத்திய திட்டங்கள் தான்.

அடையாறு மற்றும் கூவம் வடிநிலப்பகுதிகளில் உலக வங்கி நிதியில் 44.88 கி.மீ நீளத்திற்கு ரூ.120 கோடி மதிப்பீட்டிலும், சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் 50 கி.மீ நீளத்திற்கு ரூ.255 கோடி மதிப்பீட்டிலும், மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் 59.5 கி.மீ. நீளத்திற்கு ரூ.232 கோடி மதிப்பீட்டிலும், மூலதன நிதியில் 11 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள் தான் இதற்குக் காரணம்.

வட சென்னையின் பல பகுதிகளில் தண்ணீர் குறைவாகத் தேங்கியது என்றால் கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் 769 கி.மீ நீளத்திற்கு, ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 68 விழுக்காட்டுப் பணிகள் முடிக்கப்பட்டதால் தான். இது போன்ற பணிகள் 60 முதல் 80 விழுக்காடு முடிந்துள்ளது. 100 விழுக்காடு முடிந்த பிறகு இப்போதைய நிலைமை கூட ஏற்படாது. இவை எதுவும் குறை சொல்பவர் கண்ணுக்குத் தெரியவில்லை.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நவம்பர் 2021 முதல் நவம்பர் 2023 வரை நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள 350 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, 475.85 ஹெக்டேர் பரப்பளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. அதேபோன்று, நீர்வள ஆதாரத் துறைக்குச் சொந்தமான ஏரிகள், குளங்கள், ஆறுகள் உள்ளிட்ட பகுதிகளில் 19,876 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, 220.45 ஹெக்டேர் பரப்பளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

சூழலியலைக் காக்க தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதையும் இவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. "பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை முழுமையாகப் பாதுகாப்பது மிகமிக அவசியமானதாகும். தென்சென்னை பகுதிகளில் ஏற்படும் மழை வெள்ளப் பாதிப்புகளைக் குறைப்பதில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளின் பயன்பாடு குறித்து நிச்சயமாக மறு ஆய்வு செய்யப்படும். இந்த சதுப்பு நிலத்தைப் பாதுகாக்கவும், விரிவுபடுத்தவும், வனத்துறை ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோல், சென்னை பெருநகரத்திற்கான மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த முழுமைத் திட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான திட்டங்கள் உறுதி செய்யப்பட்டு, ஓராண்டு காலத்திற்குள் அது வெளியிடப்படும். இந்த மூன்றாவது முழுமைத் திட்டத்தில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் சென்னையில் உள்ள நீர்நிலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள பாதிப்புகளைக் குறைப்பதற்கான அம்சங்கள் இடம்பெறும். சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளையும், சதுப்பு நிலங்களையும் மேம்படுத்தி, வெள்ள பாதிப்புகளைக் குறைத்து, ஒரு நிலைக்கத்தக்க திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்வதற்கு இந்த மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) நிச்சயம் வழிவகுக்கும்" என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அரசின் சார்பில் செயல்படுத்தி உள்ள திட்டங்களைச் சொல்லி விட்டு, இனி எவை எவை செய்ய வேண்டும் என்று சொல்லி இருந்தால் இந்த நடுநிலை பத்திரிக்கா தர்மர்களின் பரந்த மனதைப் பாராட்டலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக எதுவுமே செய்யவில்லை என்று குறை சொல்பவர்கள் தங்கள் பத்திரிகையை பா.ஜ.க. - அ.தி.மு.க. பத்திரிக்கையாகவே அறிவித்துக் கொள்ளலாம்.

●●

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, டிச. 18 –

வங்கக்கடல் பகுதிகளில் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் தமிழகத் தின் 22 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இதனை தொடர்ந்து கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களில் 2 நாட்களுக்கு மிக கன மழைக்கு வாய்ப்பு உள்ளதாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராமநாதபுரம், விருது நகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகை ஆகிய 7 மாவட்டங்களில் இன்று கனமழை வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் அதிக பட்சமாக நெல்லை நாலுமுக்கு பகுதியில் 19 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இந்நிலையில் மணிக்கு 30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ரூ.6000 நிவாரணம்: 24 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவர்!

மக்களின் துயர் நீக்க எனது பயணம் தொடரும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, டிச. 18 –

'மிக்ஜாம் புயல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6,000 வழங்கும் பணியை நேற்று, துவக்கி வைத்தேன். இதன்மூலம் 24 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவர் என்றும், மக்களின் துயர் நீக்க என்றும் மக்கள் பணியில் எனது பயணம் தொடரும்' என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வலைதளப்பதிவில் உறுதியுடன் தெரிவித்தார்.

மிக்ஜாம் புயல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6000/ வழங்கும் பணியினை தொடங்கி வைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

மிக்ஜாம் புயல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு நிவாரணமாக 6000 ரூபாய் வழங்கும் பணியைச் சென்னை வேளச்சேரியில் துவக்கி வைத்தேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிட தமிழ்நாடு அரசு 1487 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் 24 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவர்.

மக்களின் துயர் நீக்க என்றும் மக்கள் பணியில் எனது பயணம் தொடரும்...!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

தென் மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருவதையொட்டி, தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டத்தில் - தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை

திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லும் சோதனை ஓட்டம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச.18-

தென்மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருவதை ஒட்டி தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு நதி நீர் இணைப்புத் திட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

கடந்த மார்ச் 2008ல் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தபடி, தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலில் உபரியாகக் கலக்கும் 13,758 மில்லியன் கன அடி வெள்ளநீரில், கன்னடியன் (தாமிரபரணியின் 3வது) அணைக்கட்டில் இருந்து 2765 மில்லியன் கன அடி நீரை கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளுடன் இணைக்கும் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

முடியும் தருவாயில் நான்கு நிலையில் பணிகள் !

இத்திட்டத்தை நான்கு நிலைகளாகச் செயல் படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 21.02.2009 அன்று இத்திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு நிறைவேற்றப் பட்டன. தற்போது, முதல் மூன்று நிலை களுக்கான பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு நான்காவது நிலைப் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் 67.1 கி.மீ நீளத்திற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கி.மீ நீளத்திற்கும், ஆக மொத்தம் 75.2 கி.மீட்டர் நீளத்திற்கு வெள்ளநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 17,002 ஹெக்டேர் புதிய பாசனப் பரப்பு உட்பட 23,040 ஹெக்டேர் நிலங்கள் (56933 ஏக்கர்) பாசன உறுதி பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங் கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளும் பயன்பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 32 கிராமங்கள், 177 குளங்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்கள், 75 குளங்களும் பயன்பெறும்.

வெள்ளப் பெருக்கு!

தற்போது வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்து, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இத்திட்டத்தில் உபரி நீரைக் கொண்டுசெல்வது குறித்து, நீர்வளத்துறை அமைச்சர் அவர்களிடமும் நீர்வளத்துறை அலுவலர்களுடனும், முதலமைச்சர் அவர் கள் கலந்தாலோசித்தார்கள்.

இந்த ஆலோசனையின் போது எடுக்கப்பட்ட முடிவின் படி, கன்னடியன் வெள்ளப்பெருக்குக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டு சோதனை ஓட்டம் மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

வேளாண் பெருமக்கள் மகிழ்ச்சி !

இவ்வாறு உபரிநீர் திறக்கப்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளில் வாழும் விவசாயி களின் நூற்றாண்டுக் கனவான இத்திட்டம் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், வேளாண் பெருமக்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக - எளிதில் பயன்படுத்தும் அனைத்து வசதிகளுடன்

552 புதிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள் கொள்முதல்!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, டிச.18

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பயணிகளின் பேருந்துச் சேவையை பூர்த்தி செய்யவும் மாற்றுதிறனாளிகளின் நலனுக்காக எளிதில் பயண்படுத்துவதற்குரிய அனைத்து வசதிகளுடன் கூடிய 552 புதிய தாழ் தளப் பேருந்துகள், ஜெர்மன் வங்கி (KfW) நிதி உதவியுடன் கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத் துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி ரூ.500.97 கோடி மதிப்பீட்டில் 552 புதிய தாழ்தள பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு (சென்னை மாநகர போக்குவரத்து கழகம் 352, கோயம்புத்தூர்100, மதுரை 100) மொத்தமாக 552 புதிய தாழ்தள நகர பேருந்துகளை மக்களின் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் வகையில் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக வழங்கப்படும் பொதுப் பேருந்து சேவைகள் நாட்டில் முதன்மையான நிலைக்கு உயர்ந்திடும்.

விடைத்தாள்கள் திருத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது!

குரூப்-2 தேர்வு முடிவுகள் - ஜனவரி 12-ஆம் தேதி வெளியிடப்படும்!

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிப்பு!

சென்னை, டிச.18-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி II தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் கால தாமதம் உள்ளதாகக் குறிப்பிட்டு வெளியான செய்திகள் குறித்து பின்வரும் விவரங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றன.

15.12.2022 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேர்வாணைய ஆண்டுத்திட்டம், 2023-ஆம் ஆண்டில் 15.03.2023 அன்று மேம்படுத்தப்பட்டு தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தேர்வாணைய ஆண்டுத் திட்டத்தின்படி 2023-ஆம் ஆண்டு அறிவிக்கை வெளியிடப்பட்ட அனைத்து தேர்வுகளும் (14 தேர்வுகள்) நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தேர்வுகளில் 20 இலட்சம் தேர்வர்கள் (தோராயமாக) கலந்து கொண்டுள்ளனர். தேர்வாணைய ஆண்டுத் திட்டத்தின்படி தேர்வுகள் நடத்தப்படுவதோடு 32 தேர்வுகளுக்கான (நடப்பாண்டில் அறிவிக்கப்பட்ட 9 தேர்வுகள் உட்பட) தேர்வு முடிவுகளை தேர்வாணையம் வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்ட முடிவுகளின்படி, தோராயமாக 12,500 தேர்வர்கள் பல்வேறு அரசுப் பதவிகளுக்கான வேலைவாய்ப்பினை இந்த ஆண்டு பெற்றுள்ளனர்.

தொகுதி II முதன்மை எழுத்துத் தேர்வு தொடர்பாக அதிக அளவிலான தேர்வர்களின் விடைத்தாட்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் இருந்ததாலும், மேலும், ஒரே நேரத்தில் மதிப்பீடு செய்யவேண்டியதேர்வுகள் மற்றும்பிறதேர்வுகள் நடத்தவேண்டியிருந்ததாலும், தொகுதி 11 முதன்மை எழுத்துத்தேர்வு தொடர்பான தேர்வு முடிவுகள் தேர்வாணைய அட்டவணையில் டிசம்பர் 2023 இல் வெளியிடப்படுவதாக ஏற்கனவே தற்காலிகத் தெரிவு முடிவு அட்டவணை (Tentative Result Declaration Schedule) குறித்த அட்டவணையில் அறிவிக்கப்பட்டது.

தேர்வு முடிவுகளை விரைந்து வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன், தொகுதிII முதன்மை எழுத்துத்தேர்வு விடைத்தாட்களை மதிப்பீடு செய்யும் பணிகள் துரிதமாக (விடுமுறை நாட்கள் உட்பட) நடைபெற்று வருகிறது. ஒரே சமயத்தில் பல தேர்வுகள் நடத்தவேண்டிய சூழ்நிலையாலும் மற்றும் சமீபத்திய புயல் வெள்ளம் காரணமாக விடைத்தாள்கள் திருத்தும் பணிக்கு தற்போது கூடுதல் காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய சவால்கள் இருந்தபோதிலும், தொகுதி II தேர்வின் தேர்வு முடிவுகள் ஜனவரி 12 ஆம் தேதியில் வெளியிடப்படும். எனவே, விண்ணப்பதாரர்கள் தொகுதி II தேர்வு தொடர்பாக பரப்பப்பட்டு வரும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.